# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

## 2023

ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

**Department of National Budget**
**Ministry of Finance, Economic Stabilization and National Policies**

**2023 வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**
**தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இல. 240**

## உள்ளடக்கம்


1. நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு ........ 4
1.1 அறிமுகம் ........ 4
1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் ........ 4
1.3 பிரதானபணிகள் ........ 5
1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை ........ 5
1.3.2 நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல் ........ 6
1.3.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் ........ 6
1.3.4 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள் ........ 6
1.3.5 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வ நிறுவனங்களின் வரவு செலவுத்திட்டம் தொடர்பான செயல்பாடுகள் ........ 7
1.3.6 ஏனைய செயற்பாடுகள் ........ 7
1.4 நிறுவனக் கட்டமைப்பு ........ 8
2 முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு ........ 9
2.1 செயலாற்றுகை விபரம் ........ 9
2.2 அரச செலவின முகாமைத்துவம் ........ 16
2.2.1 2023 வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல் ........ 16
2.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள் ........ 17
2.2.3 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் ........ 17
2.2.4 நிதி பரிமாற்றம் ........ 18
2.2.5 குறைநிரப்பு ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் ஊடாக மேலதிக ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடுகள் ........ 18
2.2.6 அரசாங்க செலவினம் ........ 19
2.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் ........ 20
3 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்) ........ 22
3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று ........ 22
3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று ........ 24
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று ........ 25
3.4 நிதியியற் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 27

3.4.1 அறிக்கையிடல் அடிப்படை ........ 27
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை – ஏற்புடையதல்ல ........ 28
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ........ 28
3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ........ 28
3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........ 28
3.9 நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அபிப்பிராயம் ........ 28
4 செயலாற்றுகைச் சுட்டிகள் ........ 29
4.1 அரச செலவினம் தொடர்பாக 2023 இல் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் ........ 29
5 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) அடைவுச் செயலாற்றுகை ........ 30
6 மனித வள விபரம் ........ 31
6.1 பதவியணி முகாமைத்துவம் ........ 31
6.2 மனிதவளங்கள் பற்றாக்குறை மற்றும் செயலாற்றுகை ........ 31
6.3 மனித வள அபிவிருத்தி ........ 31
7 இணக்கப்பாட்டு அறிக்கை ........ 38

# 1. நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்டஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தினை (Medium Term Expenditure Framework - MTEF) துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் மைய நிறுவனமாக இத்திணைக்களம் தொழிற்படுகின்றது. இச்செயன்முறையில் நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான தொடர்புகளை பேண முடிகின்றது.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**தூரநோக்கு**

“அரச நிதி வளங்களினை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் ஒதுக்கீடுசெய்தல் மற்றும் முகாமை செய்வதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி”

**பணிக்கூற்று**

அரசாங்க பொருட்கள் (Public Goods) மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்களுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு மூலம் அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

**நோக்கங்கள்**

- நிதி வளங்களினை பயன்வலு மற்றும் வினைத்திறன் மிக்கதாக ஒதுக்கீடு செய்தல்.
- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்.
- அரசிறை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல்.
- அரசாங்கக் கொள்கை மற்றும் நிதி வரையறைகளுக்குட்பட்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் என்பவற்றுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

## 1.3 பிரதானபணிகள்

### 1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை

எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி நடுத்தரகால வரவுசெலவுத்திட்ட வேலைச்சட்டகத்தினை (Medium Term Budgetary Framework - MTBF) பூர்த்திசெய்வதுடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ளல்.
- வரவு செலவுத் திட்ட அழைப்புக்கான சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடி வரைவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் / மதியுரைக் கூட்டங்களை நடாத்துதல்.
- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி வருமானம், செலவினம், நிதியிடல், கடன்பெறும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) வரையறைகளைத் தீர்மானித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான மதிப்பீடுகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சட்டமா அதிபர் மற்றும் சட்ட வரைஞரிடமிருந்து வரைவு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். (முதலாவது வாசிப்பு)
- வரைவு வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டினை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான குழு நிலைத் திருத்தங்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு - குழுநிலை விவாதத்தில் பங்குபற்றுதல்.
- ஆணைப்பத்திரத்தினைத் தயாரித்தல் மற்றும் கௌரவ நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- செலவின அதிகாரமளிப்புச் சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.

### 1.3.2 நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வரவுசெலவுத்திட்ட செயற்படுத்துகை தொடர்பாக அங்கீகாரமளித்தல் உள்ளடங்களாக வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக நிதி வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் இணைந்து செயற்படுதல்.
- நிதி ஒதுக்கீடுகளை வினைத்திறன் மிக்கதாக உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீட்டினை மீள ஏற்பாடு செய்தல் (Reallocation) மற்றும் மாற்றுதல் (Transfer).
- மேலதிக ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர பொறுப்புக்கள் கருத்திட்டத்தினை (TMV) முகாமைசெய்தல்.

### 1.3.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

வர்த்தக, களஞ்சியசாலைகள், அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளைத் தீர்மானித்தல் மற்றும் தேவையான போது முற்பணக் கணக்குச் செயற்பாட்டு வரையறைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

### 1.3.4 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள்

- வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்து மிகப் பொறுத்தமான நிறுவனங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் தேவையான வழிகாட்டல்களையும் வழங்குதல்.

- தேவையானவாறு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல் தொடர்பான பின்னூட்டல், மீளாய்வு மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

- விசேட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல். (வாகன குத்தகை/ யூலை வேலை நிறுத்தக்காரர்கள் கொடுப்பனவு/மோட்டார் சைக்கிள் வழங்கல்)

### 1.3.5 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வ நிறுவனங்களின் வரவு செலவுத்திட்டம் தொடர்பான செயல்பாடுகள்

- அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகள் மற்றும் செயற்பாட்டிற்கு தேவையான உதவிகளை வழங்குதல்.

- சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் மூலதன வரவுசெலவுத் திட்டத்திற்கான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 8(2) (ஆ) இன் அடிப்படையில் அனுமதி வழங்குதல்.

- 2023.10.28 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 17க்கு உட்பட்டு ஒருங்கிணைந்த நிதியில் இருந்து செலவினங்களைச் செய்வதற்கு ஒப்புதல் அளித்தல், சட்டப்பூர்வ நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக, மதிப்பீடுகள் மூலம் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

- திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு கட்டுநிதியினை விடுவிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.

- அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ நிறுவனங்கள் தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு தேவையான உதவிகளை வழங்குதல்.

### 1.3.6 ஏனைய செயற்பாடுகள்


- பாராளுமன்ற உப குழுவொன்றான அரச நிதிக் குழு (COPF) கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- பாராளுமன்ற துணைக்குழுக்களான அரச கணக்குகளுக்கான குழு (COPA) மற்றும் அரச தொழில்முயற்சிகளுக்கான குழு (COPE) ஆகியவற்றின் கூட்டங்களில் திரைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் ஆதரவை வழங்குதல்.

- பாராளுமன்ற குழுக்கள், அதிமேதகு சனாதிபதி மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்

- தேசிய வரவு செலவுத்திட்டம் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு




| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **ப.நா** | - | பணிப்பாளர் நாயகம் | **மே.ப.நா** | - | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | **க** | - | கணக்காளர் |
| **ப** | - | பணிப்பாளர் | **பி.ப** | - | பிரதிப் பணிப்பாளர் | **நி.அ** | - | நிருவாக அலுவலர் |
| **உ.ப** | - | உதவிப் பணிப்பாளர் | **மு.சே.அ** | - | முகாமைத்துவ சேவை அலுவலர் | **மொ.அ.** | - | மொழிபெயர்ப்பு அலுவலர் |
| **த.தொ.உ** | - | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | **அ.அ** | - | அபிவிருத்தி அலுவலர் | **அ.உ** | - | அலுவலக உதவியாளர் |

## 2 முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு

2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 2023 ஆம் ஆண்டு சட்டரீதியாக வகுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி 2023 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதுடன் இது சம்பந்தமாக தேவையான சட்ட அதிகாரம் 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தால் வழங்கப்பட்டது.

அதேவேளை, 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களும் உதவிகளும் வழங்கப்பட்டன.

### 2.1 செயலாற்றுகை விபரம்

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 1. 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினைச் செயற்படுத்தல் மற்றும் செலவின முகாமைத்துவம். | செலவு முகாமைத்துவம் குறித்த வழிமுறைகளை வழங்கும் வ.செ.தி. அங்கீகார சுற்றறிக்கைகளை வெளியிடுதல். | அரசாங்கச் செலவுகளை திறமையாக நிர்வகித்தல். | 2022.12.27 ஆந் திகதிய 09/2022 ஆம் இலக்க தேசிய வ.செ.தி. சுற்றறிக்கை (2023 வ.செ.திட்ட செலவினத்தை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் அரச செலவின முகாமைத்துவம்) வெளியிடப்பட்டது. |
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) உறுப்புரை மற்றும் நி.பி 66 மற்றும் நி.பி 69 இன் கீழ் நிதி மாற்றலுக்கான அதிகாரமளித்தல். | அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீட்டிற் குள் செலவினத்தை முகாமை செய்தல். | நிதி ஏற்பாட்டுக்கான 1,335 கோரிக்கைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதில் 48 கோரிக்கைகள் நிகழ்ச்சித்திட்ட மாற்றலாகவும் 1,383 கோரிக்கைகள் கருத்திட்டங்களுக்கு இடையிலான மாற்றல் களுக்கானதாகும். மாற்றலுக்கான கோரிக்கைகள் 30 இற்கு நி.பி. 69 இன் கீழ் அதிகாரம ளிக்கப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 (1) ஆவது பிரிவின் கீழ் நிதி ஏற்பாட்டினை மீண்டும் ஒதுக்கீடு செய்தல். | செலவின நிறுவனங் களின் தொழிற்பாட்டு க் காக அவற்றிற்கான மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குதல் | எதிர்பாராத மற்றும் அவசர செலவினங்கள் (உ+ம் கொவிட் – 19 தொற்றுநோய் நிலைமை) மற்றும் செலவின மதிப்பீடுகளில் காணப்படும் ஏதேனும் குறைபாட்டினை நிவர்த்திப்பதற்கு குறித்த வருடத்தில் குறை நிரப்பு ஒதுக்கீட்டுக்கான 413 கடிதங்களுக்கு பில்லியன் 258.7 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. |
| | இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவது தொடர்பான மேலதிக மதிப்பீடுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் விதிகளைப் பின்பற்றுதல். | வழங்கப்பட்ட அனைத்து மேலதிக ஒதுக்கீடு களையும் உள்ளடக்கிய 11 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. |
| 2. 2024 வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | வருடாந்த வ.செ.தி. மதிப்பீடுகளைத் தயாரிப்பது குறித்த (வ.செ.தி. அழைப்பு) வழிகாட்டுதல்களை விநியோகித்தல். | அனைத்து செலவு நிறுவனங்களி ன் வழிகாட்டுதல் க ளைப் பின்பற்றி ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல். | 2024 வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களைக் கொண்ட 2023.08.04 ஆந் திகதிய 04/2023 ஆம் இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. |
| | பொதுத் திறைசேரியின் உரிய திணைக்களங்கள் மற்றும் செலவிடும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து வரைவு வருடாந்த வ.செ.திட்டத்தைத் தயாரித்தல். | அரசாங்கத்தி ன் பொருளாதார மற்றும் மேம்பாட்டு இலக்குகளின் ஆண்டு இலக்குகளை அடைவதை உறுதிசெய்தல். | கௌரவ நிதி அமைச்சரின் தலைமையில் சம்மந்தப்பட்ட தரப்பினருடன் முழுமையான வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வ.செ.தி. கலந்துரையாடல் களை நடத்துதல். | முன்னுரிமைக ளைகவனத்திற் கொண்டு உரிய நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குகளுடன் தொடர்புடைய நிதி இலக்கினை அடைந்துகொள் ள முடியுமான வ.செ. திட்டத்தினைத் தயாரித்தல். | திறைசேரி செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய திணைக்களங்கள்/ நிறுவனங்களின் தலைவர்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. |
| | 2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகளை செய்தல். | ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தி னை பாராளுமன்றத் தில் சமர்ப்பித்தல் | 2024 வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2023.09.27 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.<br>ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2023.10.05 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (முதலாவது வாசிப்பு) |
| | | 2024 விடயங்களுக்க மைவாக தயாரிக்கப்பட்ட வ.செ. மதிப்பீடு உரிய திகதியில் அச்சிடுதல் மற்றும் விபரமான மதிப்பீட்டினை த் தயாரித்தல். | 2024 செயற்பாடுகளுடன் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு உரிய திகதியில் அச்சிடுதல் மற்றும் விபரமான மதிப்பீட்டினைத் தயாரிக்கப் பட்டதுடன் இணைய தளங்களில் பதிவேற்றப்பட்டது. |
| | | ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் பாராளுமன்றத் தில் அங்கீகரிக்கப் படல் | 2023.11.13 ஆந் திகதிய வரவு செலவுத்திட்ட உரையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் (இரண்டாவது வாசிப்பு) |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | | | 2023.11.14 முதல் 2023.12.13 வரை வ. செ. தி. விவாதம் இடம் பெறுதல்.<br><br>2023.12.13 ஆந் திகதி பாராளுமன்றத்தின் மூலம் ஒதுக்கீட்டுச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>2023 இன் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2023.12.15 ஆந் திகதி கௌரவ சபாநாயகரினால் கையொப்பமிடப்பட்டது. |
| | கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் வழங்குதல்.<br><br>செலவின முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டலைவழங்கி அதிகாரத்தினை வழங்குகின்ற சுற்றுநிருபத்தினை வெளி யிடுதல். | செலவினத் திற்கு அதிகாரமளித் தல் | 2023.12.18 ஆந் திகதி கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது.<br><br>2024 வருடத்திற்கான செலவினத்திற்கு அங்கீகாரம் வழங்கல் மற்றும் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டலினை வழங்கி 2023.12.29 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. |
| 3. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் | 2022 ஆம் ஆண்டில் வரையறைகள் திருத்தப்பட்ட முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற அனுமதியைப் பெறுதல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின்படி முற்பணக் கணக்குச் செயற்பாடு களின் திருத்தப்பட்ட வரம்புகளை அமுல் படுத்துதல். | 2022 ஆம் ஆண்டிற்கான 30 முற்பண "பி" கணக்குகள் மற்றும் 6 வணிக முற்பணக் கணக்குகளின் வரம்புகளை திருத்துவது தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் 07 தீர்மானங்களின் கீழ் 36 ஆணைகள் மூலம் பாராளுமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | முற்பணக் கணக்குகளுக்கான வருடாந்த வரையறைகளை நிர்ணயிக்கும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை III இனைத் தயாரித்தல். | முற்பணக் கணக்குகளுக் கான நடவடிக்கைக ளின் சீரான செயற்பாடு. | 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை III. |
| | | குறைந்தபட்ச வட்டி விகிதத்தின் கீழ் கடன்கள் மற்றும் முற்பணங் களைப் பெறுவதற்கு அரசு அலுவலர்களுக் கு வசதி செய்தல். | மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், ரூபா 14,430 மில்லியன் கடன்கள் / முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், ரூபா 1,455 மில்லியன் வட்டி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. |
| | | கடைகள் மற்றும் பிற முற்பணக் கணக்குகளை எந்த நஷ்டமும் இல்லாமல் பராமரித்தல். | 03 களஞ்சிய முற்பணக் கணக்குகள் மற்றும் 05 இதர முற்பணக் கணக்குகள் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் இழப்பின்றி பராமரிக்கப்பட்டன. |
| | | வணிக முற்பணக் கணக்குகளை லாபகரமான முறையில் பராமரித்தல். | தொடர்புடைய 03 வர்த்தக முற்பணக் கணக்குகளிலிருந்து ரூபா 329.5 மில்லியன் இலாபம் ஒன்றிணைக்கப்பட்ட நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| | முற்பணக் கணக்குகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை தேவைகளின் அடிப்படையில் திருத்துதல். | அடுத்த ஆண்டு 31 ஆம் திகதிக்கு முன்னர் வரையறை களை திருத்துவதற்கு பாராளுமன்ற | அரச அலுவலர்ளின் கணக்குகளுக்கான 26 முன்பணங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கான 05 வர்த்தக முற்பணக் கணக்குகளின் வரையறைகள் |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | | அனுமதியைப் பெறுதல். | மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் திருத்தப்பட்டுள்ளன. |
| 4. பாராளுமன்ற செயற்குழுக்களுக்கு ஒத்தழைப்பு வழங்குதல் | பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழு (COPA), அரச தொழில் முயற்சிகள் மீதான குழு (COPE), அரச நிதிக் குழு (COPF) கூட்டங்களில் பிரதிநிதித்துவப் படுத்தல். | பாராளுமன்ற செயற்குழுக்களுக்கு அழைப்பு விடுக்கும் போது திணைக்களத் தைபிரதிநிதித் துவப் படுத்தி தேவையான ஒத்தழைப்பு வழங்குதல். | செயற்குழு கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அலுவலொருவர் / அலுவலர்கள் பங்குபற்றி உள்ளனர். |
| 5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் உள்ளக முகாமைத்துவம் | பின்வரும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்;<br><br>(அ) திணைக்கள செயலாற்றுகை அறிக்கை<br><br>(ஆ) நிதிக் கூற்றுக்கள்<br><br>(இ) நிதி அமைச்சின் ஆண்டறிக்கையின் செலவின மீளாய்வு அத்தியாயம். | உரிய திகதிக்கு முன்னர் அறிக்கைக ளை சமர்ப்பித்தல் | பின்வரும் அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும்<br><br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br><br>(ஆ) நிதிக் கூற்றுக்கள் 2023<br><br>(இ) செலவின மீளாய்வு 2023 |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி மூலம் மனித வளத்தை மேம்படுத்துதல் | தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 22 உத்தியோகத்தர்கள் ஆன்லைனில் (மெய்நிகர்) நடத்தப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளனர். |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் முற்பணக் கணக்குகளின் கட்டுப்பாடு | முற்பணக்கணக்குகளின் வரையறைக்கு இணங்க தே.வ.செ. திட்டத் திணைக்களத்தின் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் கடன் முற்பணம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை கடைபிடித்து, இடர் கடன்கள், சைக்கிள் கடன்கள், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பவற்றுக்கு ரூபா 5,751,049.45 வரை வழங்கப்பட்டுள்ளது. |
| | கணக்காய்வு வினவல்களுக்கு பதிலளித்தல். | கணக்காய்வு வினவல்களைக் குறைத்தல். | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் (கணக்காய்வு வினாக்கள் பத்து (04) பதிலளிக்கப்பட்டது. |
| 6. வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுக்கு (சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆ.அ.வ) வசதி வழங்கல். | தேவையான போது அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்றல். | அபிவிருத்தி பங்காளர்களுடன் உள்ளக தொடர்புகளை பேணுதல். | தேவைக்கேற்ப பௌதிகரீதியாகவோ அல்லது மெய்நிகராகவோ அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>மேலும், தற்போதைய நுண்-பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பான புதிய சட்டங்களை உருவாக்கும் செயற்பாட்டில், பின்வரும் சட்டங்கள் தொடர்பாக இத்துறையின் அவதானிப்புகள் / பரிந்துரைகள் வழங்கப்பட்டன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | | | • அரசிறை முகாமைத்துவச் சட்டம்<br>• பொது படுகடன் முகாமைத்துவச் சட்டம்<br>• பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலக சட்டம் |

## 2.2 அரச செலவின முகாமைத்துவம்

### 2.2.1 2023 வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல்

2023 ஆம் ஆண்டிற்கான 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2022.12.08 அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, அரசாங்கத்தின் ஒட்டுமொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 4,654,262 மில்லியன் என்பதுடன், மூலதனச் செலவு மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதல் முறையே ரூபா 1,219,797 மில்லியன் மற்றும் ரூபா 2,025,440 மில்லியனாகவும் உள்ளது.

ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக்கான நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த செலவினம், நாடாளுமன்றத்தின் துணை மதிப்பீடுகளின் ஒப்புதலின் மூலமாகவோ அல்லது நிதி அமைச்சரால் குறைநிரப்பு சிறப்பு சட்ட உத்தரவுகளை வழங்குவதன் மூலமாகவோ, திருத்தப்பட்ட சட்டமூலத்தினை சமர்ப்பிப்பதன் மூலமாகவோ அல்லது ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவோ திருத்தப்படலாம்.

அதன்படி, 2023 நிதியாண்டில் 03 குறைநிரப்பு மதிப்பீடுகள், நிதி அமைச்சரால் வழங்கப்பட்ட 02 குறைநிரப்பு சிறப்பு சட்ட உத்தரவுகள் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் மேலதிகமாக வயர்மென்ட் நடைமுறை மற்றும் வருடத்தில் ஏற்பாடுகள் இடமாற்றங்களுக்கான 183 விண்ணப்பங்களின் ஒப்புதலுடன் 2023 நிதியாண்டில் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கலவை பின்வருமாறு திருத்தப்பட்டது.

- மீண்டெழும் செலவினம் - ரூபா 5,230,262 மில்லியன்
- மூலதனச் செலவினம் - ரூபா 1,440,297 மில்லியன்
- கடன் மீள்கொடுப்பனவு - ரூபா 11,025,440 மில்லியன்

இதன்படி, 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ரூபா 7,899,499 மில்லியனாக இருந்த மொத்தச் செலவினமானது வருட இறுதியில் ரூபா 17,695,999 மில்லியனாகத் திருத்தப்பட்டுள்ளது.

பொது வளங்களை அதிகபட்ச வினைத்திறனுடன் பயன்படுத்துமாறு வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு இணங்க, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள கேட்போர் கூடத்தை வினைத்திறனுடனும் பயனுள்ளவகையிலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏனைய நிறுவனங்கள்,

திணைக்களங்கள் மற்றும் அமைச்சுச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

### 2.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் விளைவாக, இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் இருப்புநிலைகளை மறுசீரமைப்பதற்கு தேவையான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை ஒதுக்குவதற்கு ரூபா 231.5 பில்லியன் ஒதுக்கீடு தேவைப்பட்டது. இதற்காக, நிதி அமைச்சர் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளார்.

மருந்துப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசிய கடமைகளுக்கான கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கு குறைநிரப்பு ஒதுக்கீடுகளைப் பெறுவதற்காக சுகாதார அமைச்சு 20 பில்லியன் ரூபாய்க்கான குறைநிரப்பு மதிப்பீட்டையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. சுகாதார அமைச்சின் தேர்ந்தெடுக்கப்பட்ட செலவினத் தலைப்பின் ஏற்பாடுகள் இணையாக முடக்கப்பட்டுள்ளதால், ஒட்டுமொத்த செலவின மதிப்பீடுகளில் அது பாதிப்பை ஏற்படுத்தாது.

மேலும், இலங்கை இராணுவத்தின் உணவு மற்றும் சீருடைகளுக்கு மேலதிக ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 16.5 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதேபோன்ற ஒதுக்கீட்டின் ஏற்பாடுகளும் இணையாக முடக்கப்பட்டுள்ளதால், இது ஒட்டுமொத்த செலவின மதிப்பீடுகளைப் பாதிக்காது. மேற்படி குறைநிரப்பு மதிப்பீடுகள் முறையே 09.11.2023, 15.11.2023 மற்றும் 11.12.2023 ஆகிய திகதிகளில் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

### 2.2.3 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆவது அட்டவணையில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கச் செலவினங்களைச் சமாளிக்கும் வகையில், திரட்டு நிதியிலிருந்து பணத்தைப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும் சிறப்புச் சட்ட ஆணைப்பத்திரங்களை வெளியிட நிதி அமைச்சர் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான தேவைக்காக 9 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு தேவைப்பட்டதுடன் நிதி அமைச்சரால் கூறப்பட்ட நோக்கத்திற்காக குறைநிரப்பு சிறப்பு சட்ட ஆணைப்பத்திரத்தில் கையெழுத்திட்டதன் காரணமாக, புள்ளிவிவரங்கள் முழு வரவு செலவுத்திட்டமும் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டது.

மேற்படி தொகை உட்பட, கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மேலதிக நிதி தேவையை பூர்த்தி செய்வதற்காக கௌரவ நிதி

அமைச்சர் ரூபா 9,565 பில்லியன் மதிப்பிலான 02 குறைநிரப்பு சிறப்பு சட்ட உத்தரவுகளை வழங்கியுள்ளார்.

அட்டவணை 2.2.3 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

| இல. | செலவினத் தலைப்பு | நிறுவனம் | நோக்கம் / குறிக்கோள் | தொகை (ரூபா.) |
|---|---|---|---|---|
| 01 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | கடன் மீள் வழங்கல் செயல்முறையை ஆதரிக்க தேவையான தொழில்நுட்ப சரிசெய்தல் / கணக்கீட்டு சரிசெய்தல். | 9,000,000,000,000 |
| 02 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பத்திரங்கள் மீதான தள்ளுபடியைக் கணக்கிடுதல். | 565,000,000,000 |

### 2.2.4 நிதி பரிமாற்றம்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 5, நிதி ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வைர்மென்ட் நடைமுறைக்கு உட்பட்டு, நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவின வரையறைகளுக்குள் பயன்படுத்தப்படாத விதிகளை நிறுவனங்களுக்கு மாற்ற அனுமதிக்கிறது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திணைக்களம் ரூபா 134.1 பில்லியன் தொகையான அத்தகைய 1,383 மாற்றங்களுக்கு நிதி பிரமாணக் குறிப்பு 66 மற்றும் 69 அடிப்படையில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 2.2.5 குறைநிரப்பு ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் ஊடாக மேலதிக ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடுகள்

செலவுத் தலைப்பு இல. 240 இன் கீழ் குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது, இது செலவின முகவர்களால் கணிக்க முடியாத அவசர மற்றும் எதிர்பாராத நிதித் தேவைகளை எளிதாக்குகிறது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 292.05 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் பல்வேறு செலவினப் பிரிவுகளுக்காக ரூபா 258.7 பில்லியன் மேலதிக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு வழங்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான அறிக்கைகள், 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் தேவைக்கு இணங்க அவ்வப்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டு தொடர்பான 11 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின்படி நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையில் வழங்கப்பட்ட அத்தகைய மேலதிக ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### 2.2.6 அரசாங்க செலவினம்

2023 ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்துதல் உட்பட மொத்த அரசாங்க செலவினம் 2023 இல் ரூபா 10,674 பில்லியனாக இருந்ததுடன், அது 2022 இல் ரூபா 5,986 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 78.3 சதவீதம் அல்லது பெயரளவில் ரூபா 4,688 பில்லியன் அதிகமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூபா 4,729 பில்லியனுக்கு இணையான மொத்த அரசாங்க செலவினத்தில் 44.3% மீண்டுடெழும் செலவினமாகும். இது 2022 இல் இருந்த ரூபா 3,539 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இல் 33.6 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023 இல் மொத்த மூலதனச் செலவு ரூபா 933 பில்லியனாக இருந்ததுடன், 2022ல் ரூபா 1,014 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இது 8 சதவீதம் குறைந்துள்ளது.

எனவே, 2022 இல் 16.9 சதவீதமாக இருந்த அரசாங்க மூலதனச் செலவினங்களின் பயன்பாட்டு விகிதம் 2023 இல் மேலும் வலுவிழந்து 8.7 சதவீதம் வரை கணிசமாகக் குறைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் பொதுப் படுகடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் ரூபா 5,012 பில்லியனாக இருந்ததுடன், 2022 இல் ரூபா 1,433 பில்லியனாக இருந்த பொதுப் படுகடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினத்துடன் ஒப்பிடும் போது, 250 சதவீதம் அதிகரிப்பு காணப்பட்டது.

எனவே, 2022 இல் 23.93 சதவீதமாக இருந்த பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான செலவினங்களின் பயன்பாட்டு விகிதம், கடன் மறுபரிசீலனை செயல்முறையை ஆதரிக்க தேவையான தொழில்நுட்ப மாற்றங்கள் / கணக்கியல் சரிசெய்தல் காரணமாக 2023 இல் 46.96 சதவீதமாக கணிசமாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.4.3: செலவின வகுதியின்படி அரசாங்க செலவினம்**

| | ரூபா பில். | மீண்டெழும் செலவின சதவீதம் | மொத்த செலவின சதவீதம் |
|---|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **4,729.38** | **100** | **44.31** |
| மத்திய அரசாங்கத்தின் ஆள்சார் வேதானதிகள் | 664.61 | 14.05 | 6.23 |
| பிரயாணச் செலவினம் | 24.25 | 0.51 | 0.23 |
| வழங்கல்கள் | 291.72 | 6.17 | 2.73 |
| பராமரிப்புச் செலவினம் | 12.38 | 0.26 | 0.12 |
| சேவைகள் | 75.17 | 1.59 | 0.70 |
| மாற்றல்கள் (மாகாண சபைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கான மாற்றல்கள்) | 1,205.46 | 25.49 | 11.29 |
| வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் கழிவு | 2,455.60 | 51.92 | 23.00 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 0.18 | 0.004 | 0.002 |

| | ரூபா பில். | மீண்டெழும் செலவின சதவீதம் | மொத்த செலவின சதவீதம் |
|---|---|---|---|
| **மொத்த மூலதனச் செலவினம்** | **932.75** | **100** | **8.74** |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 38.70 | 4.15 | 0.36 |
| மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | 95.73 | 10.26 | 0.90 |
| மூலதன சொத்து மாற்றல்கள் | 113.85 | 12.21 | 1.07 |
| நிதி சொத்துக்களை கையகப்படுத்தல் | 289.66 | 31.05 | 2.71 |
| ஆற்றல் விருத்தி | 6.07 | 0.65 | 0.06 |
| **ஏனைய மூலதன செலவினம்** | 388.75 | 41.68 | 3.64 |
| **பொது படுகடன் தீர்த்தல்** | **5,012.20** | | **46.96** |
| **மொத்தச் செலவினம்** | **10,674.33** | | **100** |

## 2.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்கு செயற்பாடுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மூலம் செயற்படுத்தப்படும் ஆதனக் கடன்கள் மற்றும் அரசாங்கத்தால் இயக்கப்படும் வணிக இயல்புகளின் செயற்பாடுகளைத் தவிர, அரச அலுவலர்களுக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களை உள்ளடக்கியது. அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்குவதற்காக 2023 வருடத்தின் போது 170 கணக்குகள் மற்றும் வர்த்தக ரீதியான செயற்பாடுகளுக்காக 11 கணக்குகள் உட்பட 181 கணக்குகள் தொடர்பான அதிகபட்ச செலவின வரம்புகள், வரவுகளின் குறைந்தபட்ச வரம்புகள், பற்று இருப்பின் அதிகபட்ச வரம்புகள் மற்றும் பொறுப்புகளின் அதிகபட்ச வரம்புகளை பாராளுமன்றம் விதித்தது.

### 2.3.1 பெறுகைகளின் ஆகக்கூடிய வரையறைகள்

181 முற்பணக் கணக்குகளுக்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச செலவின வரம்பு ரூபா 61.64 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டுக்கான உண்மையான செலவு ரூபா 40.74 பில்லியனாக இருந்தது. மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அதிகபட்ச செலவினத்திலிருந்து ஒட்டுமொத்தமாக 66% பயன்படுத்தப்பட்டது. அரச அலுவலர்களுக்கு முற்பணம் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து 68% சதவீதமும், வணிக முற்பணக் கணக்குகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து 62% சதவீதமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 மற்றும் 01/2023 இன் உத்தரவுகளின்படி பணியாளர் அதிகாரிகளுக்கான கடன்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது மற்றும் அச்சிடுதல், விளம்பரம் மற்றும் விற்பனைக்கான அட்வான்ஸ் கணக்கின் கீழ் உள்ள செலவுகள் ஆகியவை அதிகபட்ச செலவின வரம்புகளை உணராததற்கு முக்கிய காரணங்களாகும். கல்வித் திணைக்களத்தின் 21302 செலவினத் தலைப்பின் கீழ் வெளியீடுகளின் வெளியீடு எதிர்பார்த்தபடி நிறைவேற்றப்படவில்லை.

### 2.3.2 பெறுகைகளின் ஆகக்குறைந்த வரையறைகள்

அரசாங்கத்தின் முன்கூட்டிய கணக்குகள் மூலம் எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச வரவுகள் ரூபா 55.64 பில்லியனாகவும், உண்மையான வரவுகள் ரூபா 39.81 பில்லியனாகவும் இருந்தது. அரசாங்க அலுவலர்களின் முன்கூட்டிய கணக்கிலிருந்து எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச பெறுகைகள் நிறைவேற்றப்பட்ட போதிலும், மேலே 2.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கல்வித் திணைக்களத்தின் 21302 செலவினத் தலைப்பின் கீழ் குறைந்தபட்ச பெறுகைகள் இலக்குகள் அடையப்படவில்லை, இதனால் அது நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்ச பெறுகைகளின் வரையறைகள் தொடர்பான ஒட்டுமொத்த இலக்குகளை உணரவும்.

### 2.3.3 அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்குகளின் வட்டி வருமானம்

அரச அலுவலர்களுக்கு முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் 170 கணக்குகள் பேணப்பட்டுள்ளதுடன், மேற்படி முன்கூட்டிய கணக்கு நடவடிக்கைகளின் மூலம் 2023 ஆம் ஆண்டில் 1,445 மில்லியன் ரூபாய்கள் திரட்டு நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.4 வணிகம், களஞ்சியங்கள் மற்றும் பிற முற்பணக் கணக்குகளின் நிதி செயலாற்றுகை

ஏனைய 11 முற்பணக் கணக்குகள் 09 செலவினத் தலைப்புகளின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றதுடன, மேற்படி கணக்குகளில் 03 களஞ்சிய முற்பணக் கணக்குகளாகவும் 05 பிற முற்பணக் கணக்குகளாகவும் பராமரிக்கப்படுகின்றன. இந்தக் கணக்குகளிலிருந்து இலாபம் அல்லது நட்டம் எதிர்பார்க்கப்படுவதில்லை. 03 உற்பத்தி மற்றும் வர்த்தக நோக்கங்களுக்கான முற்பணக் கணக்குகள் இலாபகரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் 2023 இல் 329.5 மில்லியன் ரூபாய் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.5 முற்பண வரையறைகளுக்கான திருத்தம்

அரச அலுவலர்களுக்கு முற்பணங்களை வழங்குவது தொடர்பான 26 கணக்குகளின் வரையறைகளும், வர்த்தக இயல்புடைய செயற்பாடுகள் தொடர்பான 05 வர்த்தக கணக்குகளின் வரையறைகளும் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் திருத்தப்பட்டுள்ளன.

# 3 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்)

## 3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ACA-F

**2023 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| வ. செ. திட்டம் 2023 ரூபா | | குறிப்பு | உண்மையான ரூபா 2023 | மீள திருத்தப்பட்டது 2022 ரூபா | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | | | ACA-1 |
| - | உள் நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 2 | | | ACA-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | | | ACA-1 |
| - | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | 490,386 | 909,850 | |
| - | **மொத்த வருமான பெறுகைகள்(அ)** | | **490,386** | **909,850** | |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி கட்டுநிதி | | 580,651,000 | 264,438,000 | ACA-3 |
| - | வைப்புகள் | | 864,110 | 100,677 | ACA-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 11,066,726 | 11,094,209 | ACA-5 |
| | பிரதான பேரேட்டின் வேறு பெறுகைகள் | | | | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)** | | **592,581,836** | **275,632,886** | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)** | | **593,072,222** | **276,542,736** | |
| | **திறைசேரி அனுப்பீடு (ஈ)** | | 24,271 | 2,788,183 | |
| | **நிகர வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் உ = (இ)- (ஈ)** | | 593,047,951 | 273,754,553 | |
| | **கழி – செலவினங்கள்** | | | | |
| - | **மீண்டெழும் செலவினம்** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 121,520,000 | வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள் | 5 | 109,707,565 | 109,690,082 | |
| 168,480,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 156,537,204 | 68,183,852 | ACA-2(ii) |
| 16,800,000 | உதவுதொகை, மானியம், மாற்றல்கள் | 7 | 3,112,837 | 18,688,727 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | | |
| - | பிற மீண்டெழும் செலவினம் | 9 | | | |
| **306,800,000** | **மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)** | | **269,357,607** | **196,562,661** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 21,170,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 10 | 1,177,871 | 1,375,400 | |
| 352,830,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 329,860,223 | 83,669,711 | ACA-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | |
| - | நிதி சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 3,000,000 | திறன் விருத்தி | 14 | 466,027 | 327,676 | |
| - | பிற மூலதனச் செலவினம் | 15 | - | - | |
| **358,000,000** | **மொத்த மூலதனச் செலவினம் (எ)** | | **331,504,121** | **85,372,787** | |
| | வைப்புக் கொடுப்பனவு | | 863,661 | 245,579 | ACA-4 |
| | முற்பணக் கொடுப்பனவு | | 7,603,501 | 11,219,831 | ACA-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு கொடுப்பனவு | | | | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **8,467,162** | **11,465,410** | |
| | **மொத்த மூலதனச் செலவினம் ஐ = (ஊ +எ+ஏ)** | | **609,328,890** | **293,400,858** | |
| - | **டிசம்பர் 31 அன்றுள்ள மீதி ஒ= (உ-ஐ)** | | (16,280,939) | (19,646,304) | |
| | **கட்டு நிதி இணக்க கூற்றின்படி மீதி** | | (16,280,939) | (19,646,304) | ACA-7 |
| | **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கட்டுநிதி மீதி** | | - | - | ACA-3 |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ACA - P

### நிதி நிலைமை பற்றிய கூற்று

### 2023 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு

| | குறிப்பு | உண்மையான 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|---|
| **நிதியல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் | **ACA-6** | 159,432,476 | 160,399,842 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | **ACA- 5/5 (A)** | 16,031,645 | 19,494,871 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | **ACA -3** | | - |
| **மொத்த ஆதனம்** | | **175,464,121** | **179,894,713** |
| **தேறிய சொத்துக்கள்/ பங்கு** | | | |
| நிகர சொத்து | | 16,031,178 | 19,494,853 |
| சொத்து,பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு | | 159,432,476 | 160,399,842 |
| வாடகை, பணி முற்பண ஒதுக்கு | **ACA- 5 (B)** | | - |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்கு | **ACA-4** | 467 | 18 |
| கட்டுநிதி மீதி | **ACA-3** | - | |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **175,464,121** | 179,894,713 |

பக்க இலக்கம் 07 முதல் 52 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 53 முதல் 88 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| ......................... | .................. | ........................................... |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் |
| பெயர்: | பெயர்: | பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பதவி : | பதவி : | பெயர் : |
| திகதி :2024.02.22 | திகதி :2024.02.22 | திகதி :2024.02.22 |
| K.M.M. Siriwardana<br>Secretary to the Treasury and<br>Secretary to the Ministry of Finance,<br>Economic Stabilization and National Policies<br>The Secretariat<br>Colombo 01. | Jude Nilukshan<br>Director General<br>Department of National Budget<br>General Treasury<br>Colombo 01 | [illegible]<br>Accountant<br>Department of National Budget<br>General Treasury<br>Colombo 01 |

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ –சீ

### காசுப் பாய்ச்சல் கூற்று
### 2022 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கானது

| | | உண்மையான |
|---|---|---|
| | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரி பெறுகைகள் | - | - |
| கட்டனம்,அபராதம், தண்டப்பணம், உரிமங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானமல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனையவற்றிலிருந்துசேகரிக்கப்பட்ட வருமானம் | 19,137,560 | 20,261,825 |
| பெறப்பட்ட கட்டுநிதி | 580,651,000 | 264,438,000 |
| முற்பண அறவீடு | 8,157,674 | 11,770,213 |
| வைப்புப் பெறுகை | 864,110 | 100,677 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)** | **608,810,344** | **296,570,715** |
| | | |
| **கழி - காசு செலவிடல்:** | | |
| ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு | 265,446,995 | 177,278,244 |

| | | |
|---|---|---|
| மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் | 3,112,837 | 18,688,727 |
| பிறசெலவின தலைப்புகளுக்கான செலவின ஏற்பாடு | 254,954 | 221,122 |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் | 24,271 | 2,788,183 |
| முற்பணக் கொடுப்பனவு | 7,603,505 | 11,976,074 |
| வைப்புக் கொடுப்பனவு | 863,661 | 245,579 |
| **தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்டமொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)** | **277,306,223** | **211,197,928** |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்டதேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **331,504,121** | **85,372,787** |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசுப்பாய்ச்சல்</u>** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபம் | - | - |
| சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை | - | - |
| கடன் அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டகாசு (ஈ)** | - | - |
| **<u>கழி - காசு செலவிடல்:</u>** | | |
| பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்தல் | 331,504,121 | 85,372,787 |
| **முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)** | **331,504,121** | **85,372,787** |
| **முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு(ஊ)=(ஈ)-(உ)** | **(331,504,121)** | **(85,372,787)** |
| **முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு(எ)=(இ)-(ஊ)** | **-** | **-** |
| **<u>நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்நாட்டு கடன்பெறுகை | - | - |
| வெளிநாட்டு கடன்பெறுகை | - | - |
| பெறப்பட்ட மானியங்கள் | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஏ)** | **-** | **-** |
| ***<u>கழி - காசு செலவிடல்:</u>*** | | |
| உள்நாட்டு கடன்பெறுகை | - | - |
| வெளிநாட்டு கடன்பெறுகை | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதி செயற்பாடிலிருந்து பெற்ற தேறிய காசு (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) –(ஒ)** | **-** | **-** |
| **சனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31அன்று இறுதி காசு மீதி** | **-** | **-** |

## 3.4 நிதியியற் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 3.4.1 அறிக்கையிடல் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான அறிக்கையிடல் காலம் 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை ஆகும்.

2) **அளவீடுகளின் அடிப்படை**

நிதிநிலை அறிக்கைகள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துகளின் வரலாற்றுச் செலவு மறுமதிப்பீட்டுப் பெறுமதிக்கு திருத்தப்பட்டுள்ளது. வேறு வகையில் குறிப்பிடப்படாவிட்டால், மாற்றியமைக்கப்பட்ட பெறுமதி அடிப்படையிலேயே கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

நிதி அறிக்கைகளின் விவரங்கள் இலங்கை ரூபாயில் அண்மித்த ரூபாய்க்கு வழங்கப்படுகின்றன.

3) **வருமானத்தின் அங்கீகாரம்**

பரிவர்த்தனை மற்றும் பரிமாற்றமல்லாத வருமானங்கள் தொடர்புடைய வருமான காலத்தைப் பொருட்படுத்தாமல் கணக்கீட்டு காலத்திலான வருமானங்களாக கருதப்படும்.

4) **ஆதனம், பொறித்தொகுதி, உபகரணத்தின் அங்கீகாரம் மற்றும் அளவீடு (PP&E)**

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மை அந்நிறுவனத்திற்கு கிடைக்கும் என உறுதியெனின் மற்றும் அச்சொத்துக்களின் விலையை நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியும் எனின் அச்சொத்துக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களாக அறிப்பபடும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவில் அளவிடப்படும் அதேவேலை செலவு மாதிரி பொருந்தாத போது மறுமதிப்பீடு மாதிரி பயன்படுத்தப்படுகிறது.

5) **ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கு**

இந்த மறுமதிப்பீட்டு இருப்புக் கணக்கு PP&E இன் தொடர்புடைய கணக்கு.

6) **காசு மற்றும் காசுக்குச் சமனானவை**

காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் 2023 டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரப்படி உள்ளூர் நாணயத்தாள்கள் மற்றும் கையிலுள்ள நாணயங்கள் அடங்கும்.

7) **நிதிநிலை அறிக்கை வடிவில் செய்யப்பட்ட மாற்றங்கள் மற்றும் முந்தைய ஆண்டின் ஒப்பீட்டு புள்ளிவிவரங்களை மறுசீரமைத்தல்.**

2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை வடிவங்களில் செய்யப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு புள்ளிவிவரங்களின் தொடர்புடைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

### 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை – ஏற்புடையதல்ல

### 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. ,000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் | இறுதி | | |
| மீண்டெழும் | 267,200,000 | 306,800,000 | 269,357,607 | 87 |
| மூலதனம் | 358,000,000 | 358,000,000 | 331,504,121 | 93 |

### 3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா. ,000

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 2023.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | 2023.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | - | - | - | - |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 159,432,476 | 159,432,476 | | 100 |
| 9153 | காணி | - | - | - | - |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | - | - | - |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | - | - | - |

### 3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

2023 வருடத்தின் போது, கணக்காய்வாளர் நாயகத்தினால் இத்திணைக்களத்துக்கு பத்து (10) கணக்காய்வு வினாக்கள் அனுப்பப்பட்டன. இவற்றுள் அனைத்துக்கும் உரிய முறையில் பதிலளிக்கப்பட்டுள்ளன.

### 3.9 நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அபிப்பிராயம்

பின்னிணைப்பு – I என இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

# 4 செயலாற்றுகைச் சுட்டிகள்

## 4.1 அரச செலவினம் தொடர்பாக 2023 இல் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள்

வரையறுக்கப்பட்ட நிதி இடைவெளியைக் கருத்தில் கொண்டு, 2024 ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான சுற்றறிக்கை உட்பட பொதுச் செலவினங்களை உகந்த முறையில் நிர்வகிப்பதற்கான ஐந்து (05) தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1: அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள்**

| சுற்றுநிருப இல. | திகதி | விடயம் |
|---|---|---|
| NB/01/2023 | 27.01.2023 | 2023 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மீண்டெழும் ஒதுக்கீடுகளை 6 சதவீதம் குறைத்தல் மற்றும் பொதுச் செலவு முகாமைத்துவம். |
| NB/02/2023 | 02.02.2023 | செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் |
| NB/03/2023 | 16.06.2023 | புதிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்களின் முறையான மதிப்பீட்டிற்கான தேசிய அபிவிருத்திக் குழுவிற்கான வழிகாட்டுதல். |
| NB/04/2023 | 04.08.2023 | வரவுசெலவுத்திட்ட அழைப்பு-2024<br>2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் தயாரித்தல். |
| NB/05/2023 | 29.12.2023 | 2024 ஆம் ஆண்டில் பொதுச் செலவினங்களைச் செலவழித்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான அங்கீகாரம் |

# 5 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) அடைவுச் செயலாற்றுகை

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் முக்கிய பொறுப்பு அமைச்சுக்கள் திணைக்களங்கள் உள்ளடங்களாக அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக அரசாங்கத்தின் நிதி ஆதாரங்களை மதிப்பிடுவதும் ஒதுக்கீடு செய்வதும் என்பதால் 17 இலக்குகள், 169 நோக்கங்கள் மற்றும் 244 குறிகாட்டிகளைக் கொண்ட நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு நேரடியாக பொருந்தாது.

இருப்பினும், நிதியேற்பாடுகள் இல்லாமல் மற்ற நிறுவனங்களுக்கு உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியாது என்பதால் அனைத்து இலக்குகளும் இத்திணைக்களத்துக்கு மறைமுகமாக தொடர்பானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன்படி தேசிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிறுவனங்களுக்கு நிதியளிக்கும்போது நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளை வரவு செலவுத்திட்டத் செயல்முறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, 2023 வரவுசெலவுத் திட்டத்தில் அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முக்கிய திட்டங்கள் SDG களுடன் தொடர்புடையவை மற்றும் SDG கள் தொடர்பான இலக்குகளை அடைவதற்கு போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், SDG களுக்கிடையில் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் விநியோகத்தை அடையாளம் காணவும், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் SDG களுக்கு இடையிலான உறவை அடையாளம் காணவும், ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலையான வளர்ச்சிக் குழுவால் ஒரு கணினி நிரல் உருவாக்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை உருவாக்கும்போது, வரவு செலவுத்திட்ட திணைக்களம் அந்த நோக்கத்திற்காக தங்கள் ஆதரவையும் பங்களிப்பையும் வழங்குகிறது.

எவ்வாறாயினும், தேசிய வரவு செலவுத் திணைக்களம் தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டிற்கான மேற்படி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம் பின்வருமாறு.

| நிலையான அபிவிருத்தி இலக்குகள் | இலக்குகள் | 2023 இல் இலக்குகளை அடைவது |
|---|---|---|
| நீடித்த, உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல் (8) | 8:1<br>8:2 | ஏற்கனவே அடையப்பெற்றது |
| நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல் (10) | 10:2 | ஏற்கனவே அடையப்பெற்றது |
| செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கு புத்துயிர் அளித்தல் (17) | 17:1 | அரைவாசி அடையப்பெற்றது |

# 6 மனித வள விபரம்

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதய பதவியணி | பதவிவெற்றிடம்/ (மேலதிக) |
|---|---|---|---|
| சிரேட்ட | 37 | 29 | 08 |
| மூன்றாம் நிலை | 04 | 04 | - |
| இரண்டாம் நிலை | 68 | 54 | 14 |
| ஆரம்ப நிலை | 34 | 25 | 09 |
| **மொத்தம்** | 143 | 112 | 31 |

## 6.2 மனிதவளங்கள் பற்றாக்குறை மற்றும் செயலாற்றுகை

பதவியினர் பற்றாக்குறை காரணமாக பணிகளை நிறைவேற்றிக் கொள்வதில் திணைக்களம் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| தரவுத்தள செயலமர்வு MS-அணுகல் பயன்படுத்தி தரவு முகாமை | 01 | 02 நாட்கள் | 13,000 | | உள்நாட்டு | தரவுகளை தயாரிப்பது மற்றும் பேணுவது தொடர்பாகபோதிய அறிவினை வழங்குதல் |
| தாபன விதிக் கோவை / நிர்வாக முறைகள் மற்றும் நடைமுறை விதிகள் குறித்த செயலமர்வு | அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் | 01 நாள் | 8,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| போக்குவரத்து முகாமை குறித்த உயர் சான்றிதழ் படிப்பு | 01 | 20 நாட்கள் | 60,000 | | உள்நாட்டு | அலுவலகத்தில் அலுவலக வாகன, உபகரண இயக்கல் மற்றும் பராமரிப்பு பற்றிய அறிவையும் அணுகுமுறையையும் மேம்படுத்தல் |
| முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தொழிலை மேம்படுத்துவதற்கான செயலமர்வு | 02 | 02 நாட்கள் | 19,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |
| அலுவலகத்தில் ஒழுக்கத்தைப் பேணுதல் மற்றும் அது தொடர்பான ஒழுங்கு முறைகள் | அபிவிருத்தி உத்தியோகத் மற்றும் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்கள் | 01 நாள் | 8,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |
| சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்கான நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கம் | 03 | 02 நாட்கள் | 28,500 | | உள்நாட்டு | ஆரம்ப நிலை அலுவலர்களுக்கு உகந்த அலுவலக சூழலை உருவாக்கி அவர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் திறன்களை வளர்த்துக்கொள்ளுதல். |
| வாய்ப்பு முகாமைத் துவம் | 01 | 02 நாட்கள் | 9,500 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |
| அலுவலக நிமிடங்கள் மற்றும் அதிகாரப்பூர்வ கடிதம் எழுதுதல் | 02 | 01 நாட்கள் | 10,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| நி.பி. 104 இன் கீழ் இழப்பு அல்லது சேதம் பற்றிய விசாரணை | 01 | 01 நாட்கள் | 5,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |
| பொதுத் துறையில் சம்பளம் வழங்குவதற்கான நடைமுறை | 03 | 01 நாட்கள் | 15,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |
| அலுவலக முகாமைத்துவ மற்றும் நிதி ஒழுங்கு முறைகள் | 01 | 02 நாட்கள் | 10,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |
| தரவு பகுப்பாய்வுக்கான எக்செல் பயிற்சி | 09 | 03 நாட்கள் | 162,000 | | உள்நாட்டு | அலுவலக வேலைகளில் பயன்படுத்த இந்த அறிவு முக்கியமானது |
| காலநிலை மாற்றம் குறித்த திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் குறித்த கருத்தரங்கு | 01 | 03 நாட்கள் | 67,472.08 | | வெளிநாடு (கொரியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| நிதி அபிவிருத்தி மற்றும் நிதி உள்ளடக்கம் | 01 | 11 நாட்கள் | 114,212.97 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| பொதுச் செலவு மற்றும் நிதிப் பொறுப்பு | 01 | 03 நாட்கள் | 45,148.35 | | வெளிநாடு (Philippiness) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இளைஞர் அதிகாரிகளின் செயல்திறனை மேம்படுத்துதல் | 01 | 14 நாட்கள் | 123,754.90 | | வெளிநாடு (சீனா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| பட்டி மற்றும் வீதி முன் முயற்சியின் முன்னோக்குகள் குறித்த உயர்மட்ட மாநாடு | 02 | 08 நாட்கள் | 242,115.40 | | வெளிநாடு (சீனா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| தற்போதைய முன்னறிவிப்பு | 01 | 12 நாட்கள் | 116,520.80 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| உலகளாவிய மேம்பாட்டு முன்முயற்சியின் கீழ் வறுமைக் குறைப்பு மற்றும் மேம்பாடு குறித்த மாநாடு | 01 | 10 நாட்கள் | 134,996.27 | | வெளிநாடு (சீனா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்து அரசாங்கத்தின் செயல்பாடுகளை வகைப் படுத்துதல் | 01 | 05 நாட்கள் | 92,948.80 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண் ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளி நாடு | | |
| நவீன பண முகாமைத்துவ செயல் படுத்துதல் | 01 | 05 நாட்கள் | 50,053.26 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| மெக்ரோ எகனாமிக் டயக்னாஸ்டிக்ஸ் பற்றிய பாடநெறி | 01 | 14 நாட்கள் | 118079.19 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| யுனிவர்சல் சுகாதார கவரேஜுக்கான சுகாதார நிதி குறித்த 7வது இரு பிராந்திய பட்டறை | 01 | 04 நாட்கள் | 41,493.28 | | வெளிநாடு (கம்போடியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| தெற்காசியாவிற்கான காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளை வழங்குவதற்கான பிராந்திய பயிற்சி பட்டறை | 01 | 04 நாட்கள் | 49,744.53 | | வெளிநாடு (காத்மண்டு) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| தென்கிழக்கு ஆசியாவில் பொருளாதாரம் மற்றும் வணிக ரீதியான ஆரோக்கியத்தை தீர்மானிப்பவர்கள் பற்றிய பிராந்திய ஆலோசனை | 01 | 03 நாட்கள் | 76,611.20 | | வெளிநாடு (தாய்லாந்து) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| முழுமையான உபகரணங்களுடன் சீனாவின் வெளிநாட்டு உதவித் திட்டங்கள் குறித்த கருத்தரங்கு | 01 | 14 நாட்கள் | 159,567.13 | | வெளிநாடு (சீனா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| தெற்காசிய நாடுகளுடன் தூய்மையான ஆற்றல் மாற்றம் குறித்த தென் கொரியாவின் அனுபவத்தையும் அறிவையும் பகிர்ந்து கொள்ளும் திட்டம் | 01 | 05 நாட்கள் | 106,382.40 | | வெளிநாடு (கொரியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| வங்கி மற்றும் நிதி தொடர்பான சர்வதேச திட்டம் | 01 | 05 நாட்கள் | 101,443.93 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| நிலையான அபிவிருத்தி மாற்றல் மன்றம் | 01 | 04 நாட்கள் | 127,096.74 | | வெளிநாடு (கொரியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| வளரும் நாடுகளில் அரச - தனியார் கூட்டாண்மை மாதிரியின் வளர்ச்சி மற்றும் முகாமைத்துவம் பற்றிய மாநாடு | 01 | 21 நாட்கள் | 124,528.36 | | வெளிநாடு (சீனா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| திறமையான பொது முதலீட்டு முகாமை | 01 | 05 நாட்கள் | 90,258.26 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| பாலின சமத்துவத்தின் மீதான பொறுப்புக் கட்டுப்பாடு | 01 | 12 நாட்கள் | 184,551.80 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |
| அரசாங்க நிதி புள்ளியியல் குறித்த மேம்பட்ட பாடநெறி | 01 | 05 நாட்கள் | 57,788.91 | | வெளிநாடு (இந்தியா) | அலுவலக பணிகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை தீர்மானத்திற்கு பங்களிக்க இந்த அறிவு முக்கியமானது |

# 7 இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | எதிர்கால இணக்க மற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணங்கியது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணங்கியது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | - | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | ஏனைய | - | | |
| **2** | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல்** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணங்கியது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |

| | | |
|---|---|---|
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது |
| **3** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணங்கியது |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணங்கியது |
| 3.3 | ஒவ்வொருகொடுக்கள் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணங்கியது |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணங்கியது |
| **4** | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணங்கியது |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல் | இணங்கியது |
| 4.3 | வருடாந்த உள்ளககணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணங்கியது |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணங்கியது |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது |

| | | |
|---|---|---|
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணங்கியது |
| **6** | **உள்ளகக் கண்காய்வு** | |
| 6.1 | நி .பி.134 (2) டி.எம்.ஏ / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணங்கியது |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணங்கியது |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணங்கியது |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணங்கியது |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | |
| 7.1 | டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. | இணங்கியது |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | |
| 8.1 | ஆதனமுகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்துபெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணங்கியது |

| | | |
|---|---|---|
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணங்கியது |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கியது |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ள. | இணங்கியது |
| 8.5 | நி.பி 772இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணங்கியது |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணங்கியது |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணங்கியது |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணங்கியது |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணங்கியது |
| 9.5 | 2016.12. 29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணங்கியது |

| | | |
|---|---|---|
| **10** | **வங்கி கணக்குகளின் முகாமை** | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணங்கியது |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல். | இணங்கியது |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | இணங்கியது |
| **11** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணங்கியது |
| 11.2 | நி.பி .94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாதபொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்து இருக்கும். | இணங்கியது |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணங்கியது |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன்கள் நிலுவைகள் தொடர்பாக கால பகுப்பாய்வினை மேற்கொள்ளல் | இணங்கியது |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்த்தல் | இணங்கியது |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணங்கியது |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணங்கியது |

| | | |
|---|---|---|
| 14.2 | நி.பி371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணங்கியது |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணங்கியது |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணங்கியது |
| **15** | **வருமான கணக்கு** | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும். | - |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். | - |
| 15.3 | நி.பி176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | - |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணங்கியது |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணங்கியது |
| 16.3 | அனைத்து அறிக்கைகளும் 20.09.2017 தேதியிட்ட அவர்களின் சுற்றறிக்கை எண்.04/2017 இன் அடிப்படையில் நிர்வாக சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கியது |
| **17** | **பொதுமக்களுக்கு தகவல் வழங்குதல்** | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல். | இணங்கியது |

| | | |
|---|---|---|
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணங்கியது |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணங்கியது |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018(1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணங்கியது |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 இன் படி பிரசைகள் பட்டயம் / வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனத்தால் ஒரு வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. | இணங்கியது |
| **19** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | |
| 19.1 | 24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல .02/2018இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணங்கியது |
| 19.2 | பணியாட்தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வழங்கப்படுதலை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்யதல் வேண்டும். | இணங்கியது |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளமை. | பதவி நிலை அலுவலர்களுக்காக இணங்கியது |

| | | |
|---|---|---|
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணங்கியது |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கு பதிலளித்தல்** | |
| 20.1 | கடந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தினல் வெளயிடப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருத்தல் | இணங்கியது |